செ.வெ.எண்.357/2021 நாள்.31.08.2021

# திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் ஊரக சாலைகள் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டார்கள்

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம் ஊரக சாலைகள் கருத்தரங்கம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது இக்கருத்தரங்கில் சிறப்பு விருந்தினராக திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் கலந்து கொண்டார்கள்.

இக்கருத்தரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

பிரதம மந்திரி கிராம சாலைகள் திட்டத்தின் கீழ் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராமங்களில் உள்ள சாலைகள் தரமாகவும், பாதுகாப்பாகவும் அமைக்க வேண்டும் எனவும், கிராம சாலைகளில் அமைக்கப்படும் வேகத்தடைகளில் வெள்ளை மற்றும் கருப்பு நிற வண்ணம் பூச வேண்டும் எனவும், கிராம சாலை ஓரங்களில் உள்ள கிணறுகள், குளங்கள், குட்டைகள், அமைந்திருக்கும் சாலைகளில் கட்டாயம் தடுப்பு சுவர் அமைக்க வேண்டும் எனவும், கிராமங்களில் உள்ள பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள் அமைந்திருக்கும் பகுதிகளில் உள்ள சாலைகளில் வேகத்தடை கட்டாயம் அமைக்க வேண்டும், மேலும் நமது மாவட்டம் மலைகள் நிறைந்த மாவட்டம் என்பதால் மலை கிராமங்களின் உள்ள சாலைகள் தரமாகவும், பாதுகாப்பாகவும் அமைக்க வேண்டும் மலைப் பகுதிகளில் உள்ள சாலைகளில் உள்ள வளைவுகளில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு பாதுகாப்புச் சுவர் அமைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள்.

இக்கருத்தரங்கில் திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் தெரிவித்ததாவது:-

பிரதம மந்திரி கிராம சாலை திட்டம் 2000-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 21 ஆண்டுகள் கடந்து நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 5 கி.மீ தூரம் உள்ள கிராம சாலைகள் மட்டுமே அமைக்கப்படுகிறது. மேலும் 4 கி.மீ மற்றும் 3 கி.மீ வரை உள்ள கிராம சாலைகளும் இத்திட்டத்தின் கீழ் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இத்திட்டத்தின் மூலம்

அமைக்கப்படும் சாலைகள் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலைகளுக்கு இணையாக கிராம சாலைகள் அமைக்கப்பட வேண்டும். இத்திட்டத்தின் மூலம் மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம சாலைகளின் தரத்தை மேம்படுத்தவும், பொதுமக்களுக்கு முழுமையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்கள். மேலும் நிதிப் பற்றாக்குறையை ஏதேனும் இருப்பின் அதனை என்னிடமோ மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இடமோ தகவல் தெரிவித்தால் உரிய துறை அதிகாரிகளிடம் பேசி உரிய நிதி பெற்று தரப்படும் என்வும், ஒப்பந்ததாரர்கள் மேற்கொள்ளும் பணியினை அதிகாரிகள் மேற்பார்வையிட்டு தரமான முறையில் பணிகள் செய்கிறார்களா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார்கள்.

இக்கருத்தரங்கில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.கு.செல்வராசு, ஊரக வளர்ச்சித் துறை செயற் பொறியாளர் திரு.செல்வகுமரன், உதவி இயக்குநர் ஊராட்சிகள் திரு.அருண், உதவி திட்ட அலுவலர்கள் திரு.ரூபேஷ்குமார், திருமதி.விஜயகுமாரி, மற்றும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**